18th March 1966]

ஊர்க்காவல் படைகள்

*337 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஊர்க்காவல் படைகள் எத்தனை அணிகளை ஏற்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது ?

(இ) எத்தனை அணிகள் ஏற்படுத்தப்பட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 40,400 ஊர்க்காவல் படையினரைக் கொண்ட 367 ஊர்க்காவல் படை அணிகளை இம்மாநிலத்தில் ஏற் படுத்துவதென்ற ஓர் அளவை இந்திய அரசு நிச்சயித்துள்ளது.

(இ) 1965 டிசம்பர் 31-ம் தேதி வரையில் 9,890 ஊர்க்காவல் படையினரைக் கொண்ட 89 ஊர்க்காவல் படை அணிகள் இம்மா நிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை எந்த அடிப்படையில் அமைப்படுகிறது ? ஜனத்தொகை அடிப்படையில் அமைப்படுகிறதா அல்லது வேறு எந்த முறையில் அமைக்கப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : ஜனத்தொகை அடிப்படையில் அமைக் கப்படுவதில்லை குறிப்பாக, சமுதாயத்திற்கு பெருந் தொண்டு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அதிலும் நமது நாட்டுக்கு சோதனைகள் வந்த காலத்தில் இப்படிப்பட்ட படைகளின் உதவி நமக்குத் தேவையாக இருந்தது, போலீசுக்கு தேவையாக இருந்தது. இப்படிப்பட்ட பெரு நோக்கத்தோடுதான் இந்தப் படை அமைக்கப்படுகிறது.

சக்கம்பேட்டை பஞ்சாயத்து

*338 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சக்கம்பேட்டை பஞ்சாயத்து 1963-64, 1964-65-ம் வருடங் களுக்கு ஆடிட் செய்யப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சக்கம்பேட்டை பஞ்சாயத்தின் 1963-64-ம் ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்குகள் 1964-ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் தணிக்கை செய்யப்பட்டன. 1964-65-ம் ஆண்டுக்கான வரவு-செலவுக் கணக்குகள் இன்னும் தணிக்கை செய்யப்படவில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தணிக்கை செய்யப்பட்ட கணக்கில் பஞ்சாயத்து தலைவர் கையாடல் செய்திருப்பதாக கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எல்லா ஐட்டங்களிலும் இல்லை. ஒரு சில ஐட்டங்களில் பணம் கட்டவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சில ஐட்டங்களில் பஞ்சாயத்து தலைவர் தகுந்த பதில் தரவேண்டும் என்றும் வவுச்சர் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் பதில் அளிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்படுகின்ற பதில் திருப்தியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. திருப்தியாக இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்?

திரு. ஆ. தங்கவேலு: எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முப்பது ரூபாய் ஒரு ஐட்டத்தில், 40 ரூபாய் இன்னொரு ஐட்டத்தில், பிற ஐட்டங்களைப்பற்றி எல்லாம் அவரிடமிருந்து பதில் வந்த பிறகு, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. கமலநாதன்: எந்தெந்த இனங்களில் இவ்வாறு தவருக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மரம் ஏலம் விடுதல், மீன் குத்தகை விடுதல், சாலை விதி வேலைகள் இது போன்ற அம்சங்கள் தான். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

தேசியப் பாதுகாப்பு நிதி

*339 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:
திரு. எம். எஸ். மணி: } கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் தமிழ்நாட்டு முக்கிய நகரங்களுக்கு சினிமா நடிகர்கள் யுத்த நிதித் திரட்டச் சென்ருர்களா?

(இ) அவர்கள் சுற்று பிரயாணச் செலவு சர்க்கார் ஏற்றுக் கொண்டதா?

(உ) ஆமெனில், மொத்தச் செலவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) No.

(c) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த சினிமா நடிகர்கள் வசூலித்து கொடுத்த தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாடகங்கள் மூலமாகவும் மற்றும் பல ஜில்லாக்களிலும் வசூலித்த மொத்தத் தொகை ரூ. 15,10,415; இதற்கு ஆன செலவு ரூ. 63,869-42 பைசா. நிகர வருமானம் ரூ. 14,46,545-58 பைசா.